ரோஜா

1. **ரோஜா அசுவினி:**

**சேதத்தின் அறிகுறி:**

- குஞ்சுகளும், பூச்சிகளும் இளம் தண்டுகளில், பொருட்களில் மற்றும் மலர்களில் கூட்டமாக இருந்து சாறை உறிஞ்சும்
- இளம் குருத்துக்கள் உதிர்ந்துவிடும், மலர்கள் சாயமற்று காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- நீளமான பேரிக்காய் வடிவம் கொண்ட உடம்புடன் சிவப்பு கண்களுடன், கார்னிக்கில்ஸ் கருப்பு நிறத்துடனும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- மிதைல் டெமட்டான் 1மி.லி / லிட்டர் (அ) மிதைல் பாரத்தியான் 2மி.லி / லிட்டர் (அ) வேப்பம் எண்ணெய் 0.5 சதவிதம்

2. **இலைப்பேன்,**

- திராட்சை இலைப்பேன், ரிபிபோரோதிரிபஸ் க்ருவன்டேடஸ்
- வெங்காய இலைப்பேன், திரிப்ஸ் டபாசி

**சேதத்தின் அறிகுறி:**

- குஞ்சுகளும் பூச்சிகளும் இலைக்கு அடியில் உள்ள திசுக்களை சுரண்டித் திண்ணும்
- தாக்கப்பட்ட இலைகளில் வெள்ளைக் கோடுகள் காணப்படும்

- இலைகளில் வெளுப்பு நிற திட்டுகள் காணப்படும், முடிவில் காய்ந்து உதிர்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

**திராட்சை இலைப்பேன்:** பூச்சிகள் கருப்பு நிறத்திலும், குஞ்சுகள் சிவப்பு நிறத்திலும் காணப்படும்

**வெங்காய இலைப்பேன்:** குஞ்சுகளும், பூச்சிகளும் இளம் மஞ்சள் நிறத்தில் காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறை:**

- மிதைல் டெமட்டான் 2மி.லி (அ) பாசலோன் 2மி.லி / லிட்டர் (அ) வேப்பம் எண்ணெய் 3 சதவிதம் தெளிக்கவும்

3. **செதில்பூச்சி, லின்டின்கேஸ்பிஸ் ரோஸி**

**சேதத்தின் அறிகுறி:**

- தண்டை முழுவதுமாக செதில்பூச்சி சூழ்ந்து இருக்கும்
- தாவரத்தின் தாக்கப்பட்ட பகுதிகள் காய்ந்துவிடும்
- தாக்கம் அதிகமாக இருந்தால் தாவரங்கள் காய்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- செம்பழுப்பு நிற மெழுகு செதில்பூச்சி பழைய தண்டுகளின் அடிப்பகுதியில் தோன்றும்
- பெண்பூச்சி பெரிதாகவும், இறக்கையற்றும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட கிளைகளை வெட்டி எரிக்க வேண்டும்
- மண்ணெண்ணையில் (அ) டீசலில் பஞ்சை நனைத்து செதில்பூச்சியை சுரண்டிவிட வேண்டும்
- மாலத்தியான் 2மி.லி (அ) என்டோசல்பான் 2மி.லி / லிட்டர் கிளைகளை வெட்டிய பிறகு தெளிக்கவும்
- கார்போபியுரான் 5 கிராம் / தாவரம் மீன் எணஃணெய் ரோசின் சோப்பு 25 கிராம் / லிட்டரில் கரைத்து தெளிக்கவும்

4. **சிவப்பு சிலந்திப்பூச்சி, டெட்ரானைக்கஸ் உர்டிகே**

**சேதத்தின் அறிகுறி:**

- இலைகளின் அடிப்பகுதியில் சிலந்தியில் தோன்றும்
- இலைகளை கொத்துகளாக்கும் சிலந்திகள் சாறு உறிஞ்சுவதால் மஞ்சள் கோடுகள் இலைகளில் தோன்றும்
- தாக்கப்பட்ட இலைகள் மஞ்சளாகிவிடும்

**பூச்சியின் விபரம்:**

- சிவப்பு (அ) பழுப்பு நிறத்தில் சிலந்திகள் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- டைக்கோபால் 2மி.லி / லிட்டர் தெளித்தால் கட்டுப்படுத்தலாம்

5. **இலைவெட்டும் ஈ:**

**சேதத்தின் அறிகுறி:**

- இலைகளின் ஓரத்தில் உருண்டை வடிவாக வெட்டி காணப்படும்

- வெட்டிய துண்டு இலைகளை அதன் கூடுகட்டுவதற்கு எடுத்துச்செல்கிறது

**பூச்சியின் விபரம்:**

- ஈ கருப்பாகவும் உடல் முழுவதும் முடியுடனும் காணப்படும்
- வயிற்றின் கீழ்பகுதியில் சிவப்பு மற்றும் பளுப்பு நிறத்தில் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- ஈக்கள் வெட்டுவதை தவிர்க்க பூச்சிக்கொல்லிகளால் கட்டுப்படுத்த முடியாது
- இனப்பெருக்கம் இடங்களை தகர்க்க வேண்டும்

**6.ஆமணக்கு காவடிப்புழு, அக்கேயா ஜனாதா**

ஆமணக்கில் காண்க

**7. நத்தைப்புழு, பாராசா லெபிடா**

ஆமணக்கில் காண்க

**8. பயிறு புழு, ஹெலிக்கோவெர்பா ஆர்மிஜெரா**

துவரையில் காண்க

**9. பூ கொத்து வணடு, ஆக்சிடோனியா பெர்சிகலர்**

**சேதத்தின் அறிகுறி:**

- வண்டுகள் மொட்டுகளையும் பூக்களையும் உண்ணும்

**பூச்சியின் விபரம்:**

- வண்டுகள் சிவப்பு நிறத்தில் மற்றும் கருப்பு குறியீட்டுகளுடன் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- பகல் நேரங்களில் கையில் பொறுக்கி அழிக்கவும்
- செடியை சுற்றியுள்ள மண்ணில் கார்பரில் 10 சதவிதம் 30 கிராம் / தாவரத்திற்கு போடவும்
- மிதைல் பாரத்தியான் (அ) என்டோசல்பான் (அ) மாலத்தியான் 2மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்

**10. கொத்து வண்டு, அனேபமலா வகை:**

**சேதத்தின்அறிகுறி:**

- வண்டுகள் மொட்டுகளையும் பாக்களையும் உண்ணும்

**பூச்சியின் விபரம்:**

- வண்டுகள் இளம் மஞ்சள் நிறத்தில் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- பகல் நேரங்களில் கையில் பொறுக்கி அழிக்கவும்
- செடியை சுற்றியுள்ள மண்ணில் கார்பரில் 10 சதவிதம் 30 கிராம் / தாவரத்திற்கு போடவும்
- மிதைல் பாரத்தியான் (அ) என்டோசல்பான் (அ) மாலத்தியான் 2மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்

11. கரையான் (வெள்ளை எறும்புகள்), ஓடோன்டோ டெர்மிஸ் ஒடிபிஸஸ்:

**சேதத்தின் அறிகுறி:**

- தாவரத்தின் வேர்களை உண்ணும்
- தாக்கப்பட்ட தாவரங்கள் காய்ந்து விழுந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- வேலை கரையான்கள் சிறியதாகவும், மென்மையாகவும் வெள்ளை நிறத்தில் பழுப்புநிற தலையுடன் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- மண்ணில் லின்டேன் (அ) கார்பரில் கலக்கவும்
- குளோர்பைரிபாஸ் (அ) லின்டேன் 2மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்

12. கருப்பு ஈ, அலிரோகான்தஸ் ஸ்பைனிபெரஸ்:

**சேதத்தின் அறிகுறி:**

- குஞ்சுகளும், ஈக்களும் இலைகளின் சாற்றை உறிஞ்சும்
- இலைகள் சுருங்கி காணப்படும்
- இலைகளின் அடிப்பகுதியில் கருப்பு கூட்டுப்புழுக்கள் காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- ஈக்கள் சாம்பல் நிற இறக்கையோடும், மஞ்சள் நிற உடம்போடும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- மீன் எண்ணெய் ரோசின் 25 கிராம் / லிட்டர் (அ) வேப்பம் எண்ணெய் 0.5 சதவிதம் (அ) மிதைல் டெமடான் 2மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்